**செய்தி வெளியீடு எண்:1115** **நாள்:15.11.2021**

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் கப்பலோட்டியத் தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பிறந்த **150**–வது ஆண்டு விழா – **85**வது ஆண்டு நினைவு நாள் விழாவினை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் **18.11.2021** தேதியில் வ.உ.சிதம்பரனார் இல்லத்தில் மரியாதை செய்வதற்கும், பின்னர் வ.உ.சி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் ஓவியப்போட்டியினை தொடங்கி வைப்பதற்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்றப் பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள். இவ்விழா பற்றிய நிகழ்ச்சிகள் விவரம்:-

**17.11.2021** அன்று மாலை **6.00** மணிக்கு எட்டையபுரம் ஸ்ரீ கலைமகள் வில்லிசைக்குழு வழங்கும் **"வ.உ.சிதம்பரணார் வாழ்க்கைச் சரித்திரம்,"** இடம்:– மெக்கவாய் கிராமிய மேல் நிலைப்பள்ளி,

**18.11.2021** அன்று காலை **8.15 00** மணிக்கு, கலைமாமணி பெ.கைலாசமூர்த்தி ஒயிலாட்டக்குழு வழங்கும் ''வ.உ.சி ஒயில் கும்மி'' இடம்:- வ.உ.சி. நினைவு இல்லம்.

**18.11.2021** அன்று காலை **10.30** மணிக்கு தென் மண்டல ஓவியக் கலைஞர்கள் பங்குபெறும் **"செயல்பாடுகளுக்கிடைய வ.உ.சி. "** எனும் ஓவியப்போட்டி. இடம்:– வ.உ.சி. அரசு மேல் நிலைப்பள்ளி .

**18.11.2021** அன்று மாலை **6.00** மணிக்கு, கும்பகோணம் ஸ்ரீ முருகன் சங்கீத பொம்மலாட்ட சபா வழங்கும்'' வ.உ.சிதம்பரனார் வரலாறு''. இடம் :– மெக்கவாய் கிராமிய மேல் நிலைப்பள்ளி.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**